# நீங்கள் எதற்காக மரிப்பீர்கள்? (6:8–8:4)

*"ஸ்தேவான்'' என்று நான் கூறினால் உங்களில் பெரும் பாலோர் "முதல் கிறிஸ்தவ வேத சாட்சியாக மரித்தவர்" என்று எண்ணுவீர்கள். "முதல் கிறிஸ்தவ வேத சாட்சியாக மரித்தவர்" என்று நான் கூறினால், உங்களில் பெரும்பான்மையோர் ஸ்தேவானின் பெயரை நினைவுக்குக் கொண்டு வருவீர்கள். இயேசுவுக்காக மரித்த ஆயிரக்கணக்கானவர்களின் பெயர்களில் முதலாவதாக இந்த ஸ்தேவானின் பெயர் நமது இருதயங்களில் ஒரு பரிசுத்தமான இடத்தில் என்றென்றும் வைத்துப் போற்றப் படும். ஸ்தேவானைப்பற்றி நாம் வேறு என்ன அறிகிறோம்? அவர் நமது கிறிஸ்தவப் பிறப்புரிமைக்கு ஆற்றியுள்ள பங்கை நாம் புரிந்திருக்கிறோமா?*

*வானத்தில் மின்னி மறைகின்ற ஒரு எரி நட்சத்திரத்தைப் போன்று ஸ்தேவான் விளங்குகின்றார். அதிகாரம் 6ல் பந்தி விசாரணைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு பேரில் ஒருவராக இவர் நமக்கு அறிமுகப்படுத்தப்படுகிறார். அதிகாரம் 7ன் இறுதியில் இவர் மரிக்கின்றார். ஒரு சுருக்கமான கால கட்டத் தில், தேவன் தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள இவர் வல்லமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளார்.*

*இவரது பெற்றோர் இவருக்கு இட்ட பெயரானது இவரது வெற்றியான முடிவை எதிர்நோக்குவதாய் உள்ளது. "கிரீடம்" என்பதற்குப் புதிய ஏற்பாட்டில் இரண்டு வார்த்தைகள் பயன் படுத்தப்பட்டுள்ளன:diadema - இவ்வார்த்தையிலிருந்து நாம்* "diadem" - *மகுடம் என்ற வார்த்தையைப் பெறுகின்றோம், இது அரசாட்சியின் மகுடத்தை (இராஜாக்களின் தலைகளில் சூட்டப்படும் மகுடம் [வெளி. 19:12])* மற்றும் stephanos, *இது வெற்றியின் கிரீடம் (ஒலிம்பிக் விளையாட்டில் வெற்றி பெற்றவர்களின் தலையில் சூட்டப்படும் லாரல் இலைகளால் ஆன கிரீடம் போன்றது). இவ்விரண்டாவது வார்த்தையே*

*வெளி. 2:10ல் பயன்படுத்தப்பட்டுள்ளது: "நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்." ஸ்தேவான் மரண பரியந்தம் உண்மையாயிருந்தார், அவரது வாழ்க்கை, வெற்றியால் முடி சூட்டப்பட்டது!*

*இப்பாடத்திற்குப் பிறகும், இனி வரும் இரண்டு பாடங் களுக்குப் பிறகும், நாம் ஸ்தேவானைப் பற்றியும் அவரது ஊழியத்தைப் பற்றியும் நன்றாகப் புரிந்து கொள்வோம் என்று நம்புகின்றேன். மேலும் இவரது முன்னுதாரணமானது, நமது வாழ்க்கையை இன்னும் நெருக்கமாகக் காணும்படி நம்மைத் தூண்டும் என்றும் நான் நம்புகின்றேன். ஸ்தேவான் தமது விசுவாசத்திற்காக மரிக்கத் துணிந்தார். நாம் எதற்காக மரிக்கத் துணிவோம்?*

## *வாதாடத் தகுதி பெற்ற ஒரு விசுவாசம் (6:8-12)*

*நாம் படிக்கும் இவ்வரலாறு 6:8ல் துவங்குகிறது: "ஸ்தேவான் கிருபையினாலும் (''விசுவாசத்தினாலும்''; KJV மற்றும் தமிழ் மொழிபெயர்ப்பு) வல்லமையினாலும் நிறைந் தவனாய் ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தான்."[1] ஸ்தேவானின் அறிமுக மானது விசேஷித்த தனிச் சிறப்பு வாய்ந்ததாக உள்ளது, அதை லூயீஸ் ஃபாஸ்ட்டர் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்:*

> *இச்சம்பவம் வரைக்கும், நடபடிகள் நூலில் அப்போஸ்தலர்கள் மட்டுமே அற்புதங்கள் செய்ததாகக் கூறப்படுகிறது (2:43; 3:4-8; 5:12). ஆனால் இப்பொழுதோ, அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளை வைத்த பிறகு, ஸ்தேவானும் கூட அற்புத அடை யாளங்களைச் செய்ததாகக் கூறப்படுகிறது. இதே செயலை பிலிப்புவும் விரைவில் செய்யவிருக்கிறார் (8:6).*

*ஸ்தேவான் விசுவாசமும் (6:5), ஞானமும் (6:3) மற்றும் பரிசுத்த ஆவியும் (6:3, 5) நிறைந்தவராக இருந்தார் என்று நமக்கு முன்னமே கூறப்பட்டது. அவர் ''(தேவனுடைய) கிருபையினாலும்[2] வல்லமையினாலும் நிறைந்தவராயிருந்தார்" என்று இப்பொழுது நாம் படிக்கின்றோம். தேவனாலும் - தேவனைச் சார்ந்த எல்லாவற்றாலும் - அவர் நிறைந்தவராகக்*

*காணப்பட்டார்!*

*ஸ்தேவான், பந்தி விசாரணை என்ற விசேஷ ஊழியத்தைப் பெற்றிருந்தார். ஆயினும், தேவனால் தாம் பெற்றிருந்த மற்ற வரங்களை[3] பயன்படுத்தாமலிருக்க இதை அவர் ஒரு சாக்குப் போக்காகப் பயன்படுத்தவில்லை. அவர் மக்களை குணப் படுத்தி, இயேசுவைப்பற்றி மற்றவர்களுக்குக் கூறினார். பதிவுகளின்படியாக, இச்சம்பவம் வரைக்கும், அப்போஸ்தலர் கள் மட்டுமே வெளியரங்கமான எல்லா உபதேசங்களையும் செய்திருந்தனர், அதுவும் தேவாலயத்தில்தான் செய்யப் பட்டிருந்தது.[4] இப்பொழுதோ, ஸ்தேவான், இயேசுவின் செய்தியை ஜெப ஆலயங்களில் தைரியமாய்ப் பிரசங்கித்தார். "அப்பொழுது லிபர்த்தீனர் என்னப்பட்டவர்களின் ஆலயத் தைச் சேர்ந்தவர்களிலும், சிரேனே பட்டணத்தாரிலும், அலெக் சந்திரியா பட்டணத்தாரிலும், சிலிசியா நாட்டாரிலும், ஆசியா தேசத்தாரிலும் சிலர் எழும்பி, ஸ்தேவானுடனே தர்க்கம் பண்ணினார்கள்" (வ. 9).*

*நடபடிகளில் ஜெப ஆலயத்தைப்பற்றி இவ்விடத்தில்தான் முதன்முறையாகக் குறிப்பிடப்படுகின்றது. பாபிலோனியா அடிமைத்தனத்தின்பொழுது, யூதர்கள் தேவாலயத்தில் தொழுது கொள்ள முடியாமல் போனதால் ஜெப ஆலயங்கள் தோன்ற ஆரம்பித்தன. அப்போஸ்தலர்களின் காலத்தில் ரோமாபுரி ஆளுகைக்குட்பட்ட எல்லா பகுதிகளிலும் ஜெப ஆலயங்கள் பரவியிருந்தன. எருசலேமில் நூற்றுக்கணக்கில் அவை இருந் தன.[5] ஸ்தேவான், சுவிசேஷத்தை எடுத்துச் சென்ற குறிப்பிட்ட இந்த ஜெபாலயம் "லிபர்த்தீனர் என்னப்பட்டவர்களின் ஆலயம்" என்று அழைக்கப்பட்டது; இதில் உறுப்பினர்களாய் இருந்தவர்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப் பட்டவர்களாயிருந்தனர். சிலர், மத்திய தரைக்கடலின் தெற்குப் பகுதியில் உள்ள வடக்கு ஆப்பிரிக்காவைச் சேர்ந்த சிரேனே மற்றும் அலெக்சந்திரியா பட்டணத்தைச் சேர்ந்தவர் களாயிருந்தனர். மற்றவர்கள் கடலின் வடபகுதியில் உள்ள ஆசியாமைனர் பகுதியைச் சேர்ந்த சிலிசியா மற்றும் ஆசியாவி லிருந்து வந்தவர்களாயிருந்தனர். இவர்களில் யாரும் பலஸ் தீனத்திலிருந்து வந்தவர்களல்ல; இவர்கள் யாவரும் ஸ்தேவா னைப் போன்றே கிரேக்கரானவர்(யூதர்)கள் ஆவார்கள். ஸ்தேவான் தாம் கிறிஸ்தவராவதற்கு முன்பு அநேகமாய் இந்த*

ஜெப ஆலயத்தில் ஆராதிப்பவராய் இருந்திருக்க வேண்டும்.

நடபடிகள் நூலின் பிற்பகுதியில் சிரேனே, அலெக் சந்திரியா, சிலிசியா மற்றும் ஆசியா பட்டணங்களைச் சேர்ந்த மக்கள் நன்கறியப்படப் போகிறார்கள்[6] என்பதால், ஒரு வேளை லூக்கா இப்பெயர்களை இவ்விடத்தில் குறிப்பிட்டிருக்கலாம். பின்னொரு நாளில் அறுவடை அளிக்கப்போகும் விதையை ஸ்தேவான் அங்கு விதைத்தார். லூக்காவால் கூறப்பட்ட இவ்விடங்களில் மிகவும் தனிச் சிறப்புடையது சிலிசியா ஆகும். சிலிசியாவின் தலைநகர் தர்சு ஆகும் - தர்சு பட்டணத்தைச் சேர்ந்த சவுல் என்ற பெயருள்ள இளைஞர் அப்பொழுது எருசலேமில் குடியிருப்பவராயிருந்தார் (7:58; 22:3). சிலிசியாவைச் சேர்ந்த மற்ற மக்கள் ஆராதனைக்கு வந்திருந்த அந்த ஜெப ஆலயத்திற்குச் சவுலும் வந்திருக்க வேண்டும். ஸ்தேவான், இயேசுவைப் பற்றிக் கூறுவதற்கு வந்தபோது சவுலும் அங்கிருந்திருக்கலாம்.

ஜெப ஆலயத்தில் ஸ்தேவான் கொடுத்த செய்தியின் சரியான பொருளடக்கத்தை நாம் அறியவில்லை. அப்போஸ்தலர்களால் அதிகாரம் 2 முதல் 4 முடிய பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷத்தைப் போலவே இவரது பிரசங்கமும் இருந்திருக்கும் என்பது பெரும்பாலும் நிச்சயமாகும். ஒருவேளை தேவன், பேசப் படாமல் மறைமுகமாக எடுக்கும் முடிவுகளைப் பற்றிக் குரல் கொடுக்க ஸ்தேவானை வழி நடத்தியிருக்கலாம். பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும், இயேசுவாலேயன்றி வேறொருவ ராலும் இரட்சிப்பு இல்லை என்பதை வலியுறுத்தியிருந்தனர் (4:12). ஸ்தேவானும் ஒருவேளை, யூதர்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட மக்கள் என்பதாலேயோ அல்லது மோசேயின் பிரமாணத்தையும், ஏவப்பட்டிராத யூத பாரம்பரியத்தையும் கைக்கொள்ளுவதாலேயோ அல்லது தேவாலயத்தில் ஆராதனை செய்வதாலேயோ[7] இரட்சிக்கப்பட முடியாது என்ற கருத்துக் களை தெளிவான முடிவுகளாய்க் கூறியிருக்கலாம்.

ஸ்தேவானின் செய்தி எதுவாயிருப்பினும், அது ஜெப ஆலயத்தில் இருந்த சிலரின் கோபத்தை எழுப்பியது: "... சிலர் எழும்பி, ஸ்தேவானுடனே தர்க்கம் பண்ணினார்கள்." ஸ்தே வானை வார்த்தைகளினால் அமர்த்த முயற்சி செய்தவர்களு டன் அறிவொளியும் இளமையும் உள்ள யூத இருதயங் கொண்டவரான சவுலும் இருந்திருக்கலாம். ஆயினும்

*ஸ்தேவான் பின்வாங்கவில்லை; அவர் தாம் கூறியதில் நிலைத்து நின்றார். வாக்குவாதம் செய்பவராயிருப்பதற்கும் (1 கொரி. 1:11; தீத்து 3:9) உண்மையான விஷயங்களுக்காகப் போராடு வதற்கும் வேறுபாடு உள்ளது. "விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராட வேண்டும்" என்று யூதா நமக்கு எழுதி யுள்ளார் (யூதா 3). பேதுரு, "கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள்; உங்களிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்" என்று எழுதினார் (1 பேது. 3:15). சிலர், மார்க்கச் சொற்போரின் நாட்கள் முடிந்து விட்டது என்கின்றனர். இரக்கமற்ற, தேவபக்தியற்ற, கிறிஸ்தவ மற்ற சொற்போர்களுக்கான நாள் முடிந்து விட்டது. "சாந்தத் தோடும் வணக்கத்தோடும்" நடத்தப்படும் சொற்போருக்கான காலம் எப்பொழுதுமே முடிவுக்கு வருவதில்லை.*

*ஸ்தேவானை எதிர்த்தவர்கள் பலராயிருந்தனர். அவர் ஒருவர் மட்டுமிருந்தார். அவர்கள் அவரை கேள்விகளாலும், விவாதங்களாலும் மற்றும் மறுப்புகளாலும் ஒவ்வொரு பக்கத்திலிருந்தும் துளைத்திருக்க வேண்டும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் சத்தியத்தைச் சார்ந்து போராடுவது மிகவும் கடினமாகும்! வசனம் 10, "அவன் பேசின ஞானத்தையும் ஆவியையும் எதிர்த்து நிற்க அவர்களால் கூடாமற் போயிற்று" என்று கூறுகிறது. அதிகாரம் 7ல் உள்ள ஸ்தேவானின் பிரசங்க மானது, அவர் தம்மை எதிர்த்து நின்றவர்களுக்கு எவ்விதம் பதில் அளித்தார் என்று நமக்குக் கூறுகிறது: அவர் தாம் கூறிய கருத்துக்கள் ஒவ்வொன்றிற்கும் பழைய ஏற்பாட்டிலிருந்து "அதிகாரங்கள் மற்றும் வசனங்கள்" ஆகியவற்றைக் கொடுத்துப் பேசினார்! தங்களுடைய வேத வசனங்களுடனேயே அவர்கள் எவ்விதம் விவாதம் செய்ய முடியும்?*

*ஸ்தேவானின் தெய்வீக ஞானத்தால் முறியடிக்கப்பட்டவர் களில் சவுலும் ஒருவராக இருந்திருந்தால், அந்தத் தோல்வி யானது அவரை (சவுலை) உடனடியாகத் தாக்கி, இயேசுவைப் பின்பற்றியவர்கள் எல்லார் மேலும் அவர் கொண்டிருந்த வெறுப்பு என்ற நெருப்புக்கு இன்னும் அதிகமாக எண்ணெய் ஊற்றியிருக்கும்! (பின் ஒருநாளில் பவுல் தமது தலையை அசைத்து லூக்காவிடம் பின்வருமாறு கூறியிருப்பார் என்று*

என்னால் கற்பனை செய்ய முடிகிறது: "எனது சிந்தனைக்குத் தோன்றமுடிந்த எல்லா வேத வசனப் பகுதிகளையும் மற்றும் கமாலியேல் எனக்குக் கற்பித்திருந்த எல்லா யுக்திகளையும் நான் பயன்படுத்தினேன், ஆயினும் ஸ்தேவான் என்னை முறியடித் தார்!")

அவர்கள் ஸ்தேவானை வார்த்தைகளினால் அமர்த்த முடியாமல் போனபோது, சிலர் வேறு ஏதாவது ஒரு வழியைக் காணத் தீர்மானித்தார்கள். ''அப்பொழுது அவர்கள் மோசேக்கும் தேவனுக்கும் விரோதமாக இவன் தூஷண வார்த்தைகளைப் பேசக் கேட்டோம் என்று சொல்லும்படியாக மனுஷரை ஏற்படுத்தி" (வ. 11). "ஏற்படுத்தி" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது சொல்லுக்குச் சொல் சரியான விதத்தில் "மறைவாக செயல்படுதல்" என்று பொருள்படுகிறது. ஸ்தேவானின் விரோதிகள் மறைவான முறையை - சந்தேகமின்றி மேஜைக்கடியில் பணம் தரப் பட்டிருக்கும் - பயன்படுத்தினர்; சாட்சிகளுக்கு இலஞ்சம் தரப்பட்டது.

பேதுரு மற்றும் இருந்த அப்போஸ்தலர்களை இதற்குமுன் விசாரணையில் நிறுத்தியபோது, இயேசுவைக் கண்டனம் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட அதே தந்திரங்கள் பயன் படுத்தப்பட்டதை நாம் கண்டோம். ஸ்தேவான் ஆலோசனைச் சங்கத்தின் முன்பாகக் கொண்டுவரப்பட்ட போதும் இது போலவே செய்யப்பட்டது - ஏனெனில் ஸ்தேவானின் எதிரி களைப் போலவே, கிறிஸ்துவின் எதிரிகளும் "இயேசுவைக் கொலை செய்யும்படி அவருக்கு விரோதமாகப் பொய்ச் சாட்சி தேடினார்கள்'' (மத். 26:59). ஸ்தேவானுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் பொய்யானவைகளாயிருந்தன (6:13), அவை அவரது வார்த்தைகளைத் திரித்துக் கூறியதன் விளைவாய் ஏற்பட்டன. மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள் வதன் மூலம் ஒருவரும் இரட்சிக்கப்பட முடியாது என்றுதான் அவர் போதித்தார், ஆனால் அவர் மோசேக்கு விரோதமாகப் பேசவில்லை. அவர் தேவனுக்கெதிராகப் பேசியிருக்கவும் மாட்டார் என்பது மிக உறுதியாகும்!

ஆயினும், ஸ்தேவானுக்கு எதிராகப் பிரசித்தமாயிருந்த கருத்தைத் தூண்டிவிடுவதற்கு இந்தக் குற்றச்சாட்டு போது மானதாய் இருந்தது. "ஜனங்களையும், மூப்பரையும், வேதபார

கரையும் எழுப்பிவிட்டு” (வ. 12அ). இந்நிகழ்ச்சி வரையிலும், உயிர்த்தெழுதலைப் பிரசங்கிக்கிறதினால் கிறிஸ்தவர்களைச் சதுசேயர்கள் வெறுத்தபோதிலும், கிறிஸ்துவைப் பின்பற்றியவர்கள் யூத சமுதாயத்தினரால் மிகவும் மதிக்கப்படுவதை மகிழ்ச்சியுடன் அனுபவித்திருந்தனர். இப்பொழுது சூழ்நிலை மாறியது: “அவன்மேல் (அவன் பிரசங்கித்து, மற்றும் மக்களை குணப்படுத்திக் கொண்டிருக்கையில்; 6:8, 10ஐக் காணவும்) பாய்ந்து, அவனைப் பிடித்து, ஆலோசனைச் சங்கத்துக்கு முன்பாக இழுத்துக் கொண்டு போய்[8]” (வ. 12ஆ).

## தற்காப்பு வாதத்திற்குத் தகுதி பெற்ற ஒரு விசுவாசம் (6:13-7:53)

மீண்டும் ஒருமுறை வல்லமைவாய்ந்த சனதெரீன் சங்கத்தின் முன்னதாக, இயேசுவைப் பின்பற்றிய ஒருவர் நின்றார். ஸ்தேவானை அவ்விடத்திற்கு இழுத்துச் சென்றவர்கள் தங்களது சாட்சிகளை முன்னிறுத்துவதற்கு நேரத்தை வீணாக்கவில்லை:

> பொய்ச்சாட்சிகளையும் நிறுத்தினார்கள், இவர்கள்: “இந்த மனுஷன் இந்தப் பரிசுத்த ஸ்தலத்துக்கும் வேதப் பிரமாணத்துக்கும் விரோதமாகத் தூஷண வார்த்தைகளை ஓயாமற் பேசுகிறான்; எப்படியென்றால், நசரேயனாகிய அந்த இயேசு இந்த ஸ்தலத்தை அழித்துப்போட்டு, மோசே நமக்குக் கொடுத்த முறைமைகளை மாற்றுவானென்று இவன் சொல்லக் கேட்டோம்” என்றார்கள்[9] (வ. 6:13, 14).

அவர்கள் ஒரு உண்மையில் சரியானவர்களாயிருந்தனர்: ஸ்தேவான் தாம் அன்பு காட்டிய இயேசுவைப்பற்றி “ஓயாமற் பேசினார்’’ என்பதில் சந்தேகமில்லை! மற்ற யாவும் (ஸ்தேவானால் மேற்கோள் காட்டப்பட்ட) இயேசுவின் வார்த்தைகளை அவர்கள் வேண்டுமென்றே தவறாக எடுத்துக் கூறியவைகளாயிருந்தன. யூதர்கள் தங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை மீறியதாக இயேசு கூறியிருந்தார் (இ.வ. மத். 15:3). தேவாலயம் அழிக்கப்படும் என்று இயேசு கூறியிருந்தார் (மத். 24:1, 2).[10] தாம் தேவாலயத்தை அழிக்கப்போவதாகவோ, மோசேயினால் உண்டான உண்மையான உபதேசங்களுக்கு விரோதமாகவோ இயேசு எப்பொழுதும் எதையும் கூறியிருக்கவில்லை.

*நியாய சங்கத்தாரிடம் மோசமான வகையில் குற்றம் சாட்டப்பட்ட பிறகு, குற்றம் சாட்டப்பட்டவர் எப்படி பதில் செயல் புரிகிறார் என்று பார்க்க, அவர் பக்கமாய் இயல்பாகவே நாம் திரும்பி குற்றம் சாட்டப்பட்டவரைக் காண்கிறோம் (ஒருவேளை அவர் குற்றமுள்ளவரா என்பது அவரது முகத்தைப் பார்த்தாலே தெரியும்). ஸ்தேவானுக்கெதிராக குற்றம் சாட்டப்பட்ட பிறகு, சங்கத்தில் உட்கார்ந்திருந்த அனைவரும் "அவன்மேல் கண்ணோக்கமாயிருந்தனர்." அவர்கள் என்ன காணும்படி எதிர்ப்பார்த்தனர்? குற்றவாளியாகக் காணப்பட்ட ஒரு மனிதரையா? அவர்கள் எதை எதிர்பார்த்திருந்தாலும், வேறொன்றை அவர்கள் கண்டனர். "ஆலோசனை சங்கத்தில் உட்கார்ந்திருந்த அனைவரும் அவன்மேல் கண்ணோக்க மாயிருந்து, அவன் முகம் தேவதூதன் முகம் போலிருக்கக் கண்டார்கள்" (6:15). இது, அவர் அமைதியாகவும், தைரியத் துடனும் இருந்தார் என்று பொருள்படுகிறதா? இது, சீனாய் மலையிலிருந்து இறங்கி வந்தபோது தேவனுடைய மகிமையின் ஒளி வீசிய மோசேயின் முகத்தைப்போல் (யாத். 34:29) அவரது முகமும் இருந்தது என்று பொருள்படுகிறதா? அல்லது மறுரூப மலையிலிருந்தபோது இயேசுவின் முகத்தில் ஒளிர்ந்த பிரகாசம் (மத். 17:2) அவரது முகத்திலிருந்தது என்று பொருள்படுகிறதா? பயந்து நடுங்கும் ஒரு குற்றவாளிக்குப் பதில் அவர்கள் மறுரூப மான ஒரு கிறிஸ்தவரைக் கண்டார்கள் என்றுமட்டும் நாம் அறிய முடிகிறது!*

*பிரதான ஆசாரியர்[11] விரைவாகச் சமாளித்துக் கொண்டு, இந்தக் குற்றச்சாட்டுகள் உண்மையானவையா அல்லவா என்று ஸ்தேவானிடத்தில் கேட்டார்: "காரியம் இப்படியா இருக் கிறது?" (7:1). சட்டப்படி, ஸ்தேவான் பதில் சொல்லும்படி கேட்கப்படவில்லை. பதில் சொல்வதில் உள்ள அபாயத்தை அவர் அறிந்திருக்க வேண்டும். ஆயினும், அப்போஸ்தலர் களைப் போலவே அவரும் பிரசங்கிக்கக் கிடைத்த - அதன் மூலம் மனிதர்களின் ஆத்துமாவை இரட்சிக்க முயற்சி செய்யும் - ஒவ்வொரு வாய்ப்பையும் அவர் பயன்படுத்தினார்.*

*ஸ்தேவானின் தற்காப்பு வாதம் - 7:2-53 வரையில் உள்ளது - ஒரு பிரசங்கமாகும். ஸ்தேவான் தனக்கெதிரான குற்றச்சாட்டு களிலிருந்து தன்னைத் தற்காத்துக் கொள்ளும்படி பேசினார், மேலும் அவர் தாமல்ல, தம்மைக் குற்றம் சாட்டினவர்களே -*

*தம்மைக் குறித்துக் கூறிய குற்றத்தைச் செய்த - குற்றவாளிகள் என்ற கருத்தை உறுதியாக நிலைநாட்டினார்! தாமல்ல - அவர்களே - தேவனிடத்திற்கு மனந்திரும்பத் தேவை என்று நிரூபித்தார்! நமது அடுத்த பாடத்தில் இந்தப் பிரசங்கத்தைப் பற்றி நாம் விபரமாகப் படிப்போம்; இப்பொழுது கலக்கப் படுத்தும் அதன் முடிவைக் கவனிப்போம்:*

> *"வணங்காக் கழுத்துள்ளவர்களே, இருதயத்திலும் செவி களிலும் விருத்தசேதனம் பெறாதவர்களே, உங்கள் பிதாக் களைப்போல நீங்களும் பரிசுத்த ஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்து நிற்கிறீர்கள். தீர்க்கதரிசிகளில் யாரை உங்கள் பிதாக்கள் துன்பப்படுத்தாமல் இருந்தார்கள்? நீதிபரருடைய வருகையை முன்னறிவித்தவர்களையும் அவர்கள் கொலை செய்தார்கள். இப்பொழுது நீங்கள் அவருக்குத் துரோகிகளும் அவரைக் கொலை செய்த பாதகருமாயிருக்கிறீர்கள். தேவதூத ரைக் கொண்டு நீங்கள் நியாயப்பிரமாணத்தைப் பெற்றிருந்தும் அதைக் கைக்கொள்ளாமற்போனீர்கள்" என்றான் (7:51-53).*

*இந்த வார்த்தைகளைப் பேசியபோது ஸ்தேவான் தாம் மேற்கொள்ளும் இடர்ப்பாட்டை அறிந்திருந்தார், உயிர்ப் பிக்கப்படுதல் அல்லது மறுத்துப் போகுதல், விடுதலை அல்லது மரணம், இரட்சிப்பு அல்லது கல்லெறிதல் ஆகியவையே அவரது வார்த்தையின் விளைவாயிருக்க முடியும்.*

## *மரிப்பதற்கும் தகுதி பெற்ற ஒரு விசுவாசம் (7:54-60)*

*அங்கு உயிர்ப்பித்தல் எதுவும் நடைபெறவில்லை. வசனம் 54, "இவைகளை அவர்கள் கேட்டபொழுது மூர்க்கமடைந்து ..." என்று குறிப்பிடுகிறது. 5:33லும் "மூர்க்கமடைந்து" என்ற வார்த்தை காணப்படுகிறது. கமாலியேல் இடையிட்டுப் பேசுவதற்குமுன் ஆலோசனைச் சங்கத்தார் அப்போஸ்தலர் களைக் கொல்வதற்குத் தயாராக மூர்க்கமடைந்தது போலவே இப்பொழுதும் நடந்தது. இது சொல்லுக்குச் சொல், மரமறுக்கும் இரம்பம் ஒன்றினால் "அவர்களின் இருதயங்கள் அறுக்கப் பட்டன" என்று பொருள்படும். தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்புவதற்குப் பதில் அவர்கள் "மூர்க்கமடைந்து"* (NIV) *"அவனைப் பார்த்துப் பல்லைக் கடித்தார்கள்" (வ. 54ஆ).*

*கோபத்தில் அவர்கள் தங்கள் தாடைகளை வலுவாக இறுக்கியபோது, அவர்களின் பற்கள் ஒன்றுக்கெதிராக ஒன்று மோதி அரைபட்டன. ("பற்கடிப்பு" என்ற சொற்றொடர் பொதுவாக, நரக ஆக்கினையுடன் தொடர்புள்ளதாகப் பயன்படுத்தப்படுவதால், ஆலோசனைச் சங்கத்தார் நித்திய அக்கினியைச் சென்றடையப் பாத்திரவான்களாயிருந்தது போலச் செயல்பட்டனர் என்று இவ்விடத்தில் லூக்கா யோசித்திருக்கலாம்! [மத். 8:12; 13:42, 50; 24:51; 25:30; லூக். 13:28].)*

*பகைமை நெருப்பைக் குளிர்விக்க எந்த கமாலியேலும் இச்சமயத்தில் பேசவில்லை. பெரும் வெறி கொண்ட அக்கூட் டத்தாரை ஸ்தேவான் பார்க்கையில், தமது மரணம் நெருங்கி விட்டதை அறிந்திருப்பார். பூமியில் மட்டுமல்ல, பரலோகத் திலும் இது ஒரு தனிச் சிறப்பு வாய்ந்த தருணம் ஆகும் - ஸ்தேவானைத் தாங்கி நிறுத்த தேவன் அவருக்கு ஒரு விசேஷித்த தரிசனத்தைக் கொடுத்தார்.[12] வெறுப்பினால் நிறைந்த அழகற்ற முகங்கள் ஸ்தேவானின் பார்வையிலிருந்து மறைந்தன; அதற்கு மாறாக, அன்பினால் நிறையப் பெற்ற அழகான முகம் ஒன்று அவரது பார்வையில் பாய்ந்தது. "அவன் பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவனாய், வானத்தை அண்ணாந்து பார்த்து, தேவனு டைய மகிமையையும்,தேவனுடைய வலது பாரிசத்திலே இயேசுவானவர் நிற்கிறதையும் கண்டு" (7:55). இயேசுவானவர் பரலோகத்திற்குத் திரும்பச் சென்ற போது, தேவனுடைய வலது பாரிசத்தில் அவர் அமர்ந்தார் (மாற். 16:19; மற்றும் சங். 110:1, 4; எபி. 1:13; 8:1, 2 ஆகியவற்றையும் காணவும்). ஆயினும் இப்பொழுது, தமது விசுவாசத்திற்காக மரிக்க விருப்பமாயிருந்த ஒருவருக்கு மரியாதை செலுத்துவதற்காக அவர் (இயேசு கிறிஸ்து) எழுந்து நின்றார்.[13]*

*ஸ்தேவான், "அதோ, வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷகுமாரன் தேவனுடைய வலது பாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன்" என்றார் (7:56). இயேசுவின் விசாரணையின் போது பிரதான ஆசாரியர் அவரை நோக்கி, "நீ ஸ்தோத்தரிக்கப் பட்ட தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா?" என்று கேட்டிருந்தார். இயேசு அதற்கு, "நான் அவர்தான்; மனுஷ குமாரன் சர்வவல்லவரின் வலது பாரிசத்தில் வீற்றிருப்பதை நீங்கள் காண்பீர்கள்" என்று பதிலளித்தார். அப்போது பிரதான*

ஆசாரியன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு, "இனிச் சாட்சிகள் நமக்கு வேண்டியதென்ன? தேவதூஷணத்தைக் கேட்டீர்களே" என்று அலறினார் (மாற். 14:61-63)! இயேசு தாம் தேவனின் வலது பாரிசத்தில் இருப்பதாகக் கூறியது தேவதூஷணமாகிய குற்றமென்றால், ஸ்தேவான், தேவனின் வலது பாரிசத்தில் இயேசு நிற்பதாகக் கூறியதும் தேவதூஷணக் குற்றமாகும்![14]

"நான் இயேசுவைக் காண்கின்றேன்" என்று ஸ்தேவான் சொன்னதே, அவர்களுக்குக் கடைசி வைக்கோலாக இருந்தது! ''உரத்த சத்தமாய்க் கூக்குரலிட்ட'' தனிச் சிறப்புள்ள ஆலோசனைச் சங்க உறுப்பினர்கள் தங்கள் சட்டப்பூர்வமான வஸ்திரங்களுடன், தங்கள் கரங்களினால் ஸ்தேவானின் கோப மூட்டும் வார்த்தைகளுக்குத் தங்கள் "காதுகளை அடைத்துக் கொண்டு" "ஒருமனப்பட்டு அவன் மேல் பாய்ந்தனர்" (7:57). இது நமது நாட்டின் உயர் நீதிமன்ற நீதிபதிகள் தங்கள் இருக்கைகளிலிருந்து தாவி, தானியங்கி ஆயுதங்களை தங்கள் கருப்பு வஸ்திரங்களிலிருந்து உருவி, தங்கள் முன்பாகத் தற்காப்பு வாதம் செய்பவரைக் குறி பார்ப்பது போன்றதாகும்! ஏவப்பட்ட மனிதர் ஒருவர் இதைக் கூறியிராவிட்டால், இக்காட்சி நடந்தது என்று நம்புவதற்கு மிகவும் கடினமானதாயிருந்திருக்கும்!

அடுத்து நடந்த சம்பவமானது ரோமானியச் சட்டப்படியும் மற்றும் யூதர்களின் சட்டப்படியும் பார்த்தால், ஒரு சட்ட விரோதமான செயலாக இருந்தது. இதற்கு முன், கமாலியேல், ஆலோசனைச் சங்கத்தாரை அமைதிப்படுத்தியிருக்காவிட்டால், அப்போஸ்தலர்களையும் இதே விதமாகவே அவர்கள் நடத்தியிருப்பார்கள். "அவனை நகரத்துக்குப் புறம்பே தள்ளி, அவனைக் கல்லெறிந்தார்கள்" (7:58அ). ஸ்தேவானை அமர்த்திருக்கச் செய்ய முடியாமற் போனபோது, அவர்கள் அவருக்கெதிராகப் பொய்யுரைத்தனர். அவருக்குப் பதில் கூற முடியாமல் போனபோது, அவர்கள் அவரைக் கொன்றனர். தவறுகள் எப்பொழுதுமே சத்தியத்திற்கு இவ்விதமாகவே பதில் அளிக்கின்றன.

ஆயினும், நடந்த நிகழ்ச்சியில் சட்ட பூர்வமான சில செயல்பாடுகள் காக்கப்பட்டன. ஸ்தேவான் மீது தேவ தூஷணக் குற்றம் சாட்டப்பட்டது, தேவதூஷணத்திற்கு

*கல்லெறிதலே தண்டனையாக இருந்தது (லேவி. 24:10-23; உபா. 13:6-11). ஆகவே, அவர்கள் அவரைக் கல்லெறிந்தனர். மரண தண்டனையானது நகரத்துக்குள் தரப்படக் கூடாது என்று யூத பாரம்பரியம் கூறியதால், அவரை எருசலேமுக்குப் புறம்பே தள்ளிச் சென்றனர் (1 இரா. 21:13 ஐக் கவனிக்கவும்). தீர்ப்பளிக்கப்பட்டவருக்கு எதிராகச் சாட்சி சொன்னவர்களே முதல் கல்லெறிய வேண்டும் (உபா. 17:7; யோவா. 8:7 ஐயும் கவனிக்கவும்). இவ்விதமாகவே "... சாட்சிக்காரர் தங்கள் வஸ்திரங்களைக் கழற்றி" (7:58ஆ) என்று நாம் வாசிக்கின்றோம். அவர்கள் அப்பொழுதுதான் கல்லெறியத் தங்கள் கைகளை சுலபமாய்க் கையாள முடியும்.*

*அவர்கள் தங்கள் வஸ்திரங்களை "சவுல் என்னப்பட்ட ஒரு வாலிபனுடைய பாதத்தினருகே" வைத்தார்கள் (7:58இ). இங்கு தான் நாம் (பின்னாளில் பவுல் என்று அறியப்பட்ட) சவுலைப் பற்றி முதன்முறையாகப் படிக்கின்றோம், ஆனால் இவர் அநேகமாக கிரேக்கரானவர்(யூதர்)களின் ஜெப ஆலயத்தில் ஸ்தேவானுடைய சொற்போரில் ஈடுபட்டிருந்திருக்க வேண்டுமென்று நாம் யூகிக்கிறோம். அவர் ஸ்தேவானின் விசாரணையின்போது ஆலோசனைச் சங்கத்தாருடன் இருந்து, ஸ்தேவான் மேல் காட்டு மிருகங்கள் போலப் பாய்ந்தவர்களில் ஒருவராயுமிருந்திருப்பார் என்பதில் சந்தேகமில்லை. 8:1ல் "அவனைக் கொலை செய்கிறதற்குச் சவுலும் சம்மதித்திருந்தான்" என்று நாம் படிக்கின்றோம். பின்னாளில், ஒரு ஜெபத்தில், பவுல், "உம்முடைய சாட்சியாகிய ஸ்தேவானுடைய இரத்தம் சிந்தப்படுகிறபோது, நானும் அங்கே நின்று, அவனைக் கொலை செய்வதற்குச் சம்மதித்து, அவனைக் கொலை செய்தவர்களின் வஸ்திரங்களைக் காத்துக் கொண்டிருந்ததை" என்று கூறினார் (22:20).*

*சாட்சிக்காரர் தங்கள் வஸ்திரங்களை வேறொருவரிடம் ஒப்புவிக்காமல், சவுலிடம் ஒப்படைத்திருந்தது ஏன்? ஒரு வேளை இத்தண்டனையை நிறைவேற்ற சவுல் பொறுப்பாளராக இருந்திருக்கலாம் என்பதை இது சுட்டிக் காட்டுகின்றது. ஒருவேளை இது வெறுமனே ஒரு தற்செயலானதாகவும் இருந்திருக்கலாம். சாட்சிக்காரர் தங்கள் வஸ்திரங்களை சவுலின் பாதத்தருகே வைத்தது ஏன் என்று நாம் தெளிவாக அறிய முடியவில்லை, ஆனால் லூக்கா இந்த விபரத்தை நம்மிடம் ஏன்*

பகிர்ந்து கொள்கிறார் என்பதை நாம் யூகிக்க முடிகிறது: சவுல் இதில் எவ்வளவாய் ஈடுபட்டிருந்தார் என்பதையும், ஒவ்வொரு விபரமும் அவர் மனதில் அழிக்க முடியாதபடி எவ்வளவாய்க் கொழுந்து விட்டு எரிந்தது என்பதையும் நமக்குக் காண்பிக்கவே அவர் இதைப் பகிர்ந்து கொள்கிறார் (22:20; இ.வ. 1 தீமோ. 1:13).

கல்லெறிதல் என்பது மரணமடைவதில் ஒரு கொடூரமான முறையாகும். ஆலோசனைச் சங்கத்தார், கல்லெறிவதற்கென்று நியமிக்கப்பட்டிருந்த இடத்திற்கு ஸ்தேவானை இழுத்துச் சென்றிருந்தால், அவர்கள் அவரை ஒரு குன்றின் உச்சியிலிருந்து கீழே தள்ளி, அவரை நசுக்குவதற்குப் பெரும் பாறைகளை உருட்டி விட்டு, சிதைந்து சிதறும் அவரது சரீரத்திலிருந்து கடைசி மூச்சுப் பிரியும் வரை பெரும் கற்களால் பிறகு அவரைத் தாக்கியிருப்பார்கள். ஆனால் இங்கு நடைபெற்றது ஒரு கும்பலின் செயல்பாடானதால், அவர்கள் அவரைச் சுற்றி நின்று கொண்டு தங்கள் சாபமான வார்த்தைகளுடன் அவர்மேல் கற்களை எறிந்திருக்க வேண்டும்.

சுற்றிச் சுழலும் ஒவ்வொரு புயலின் மையப்பகுதியிலும் அமைதியான ஒரு “கண்” இருக்கும். வெறுப்பினால் நிறைந்து சுற்றிலும் நின்றவர்களுக்கு மத்தியில், ஸ்தேவான் அமைதியுடனிருந்தார். அவரது இறுதிக் கணங்கள் 7:59, 60ல் பதிவு செய்யப்பட்டுள்ளன:

> அப்பொழுது: “கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக் கொள்ளும்”[15] என்று ஸ்தேவான் தொழுது கொள்ளுகையில், அவனைக் கல்லெறிந்தார்கள். அவனோ முழங்காற் படியிட்டு: ‘‘ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும்’’ என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். இப்படிச் சொல்லி நித்திரையடைந்தான்.

கொலை செய்தவர்களுக்காகத் தனது உதடுகளில் ஒரு ஜெபத்துடன் ஸ்தேவானால் மரிக்க முடிந்தது எப்படி? ‘‘பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே” (லூக். 23:34) என்று சிலுவையில் ஜெபித்தவரின் ஆவியை அவர் தமக்குள் கொண்டிருந்தார், மேலும் அவர் (இயேசு) தமது ஆவியைப் பிதாவினிடத்தில் ஒப்புவித்தார்: ‘‘பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்’’ (லூக். 23:46). சவுலினால் இக்காட்சியைத் தமது மனதிலிருந்து அழிக்க

முடியாதிருந்தது. பின்னாளில் அகஸ்ட்டின் அவர்கள், "பவுலின் பிரசங்கத்திற்கான ஸ்தேவானின் ஜெபத்திற்குச் சபை கடன் பட்டுள்ளது" என்று நமது மனதிற்குக் கருத்தளித்தார்.

ஆயினும், அந்தக் கணத்தில், ஸ்தேவானின் இரத்தத்தினால் கட்டுக்கடங்காத வெறி கொண்ட சவுல், ஒரு காட்டு மிருகம் போலாகி சபையைப் பாழாக்கத் தொடங்கினார். ஸ்தேவானின் மரணத்துக்கு அடுத்து வந்த நிகழ்ச்சிகள் பற்றி நாம் இவ்விதம் படிக்கின்றோம்:

> அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று ... சவுல் வீடுகள்தோறும் நுழைந்து, புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்துக் கொண்டுபோய் காவலில் போடு வித்து, சபையைப் பாழாக்கிக் கொண்டிருந்தான் (8:1ஆ, 3).

ஸ்தேவான், வேத சாட்சியாக மரணமடைந்த முதல் நபராவார், ஆனால் அவர் கடைசியானவரல்ல.

## முடிவுரை

ஸ்தேவான் தமது விசுவாசத்திற்காக மரணத்தை அடைய விருப்பமுள்ளவராயிருந்தார். "நான் எதற்காக மரிக்க விருப்பமுள்ளவனாயிருப்பேன்?" என்ற கேள்வியை நாம் ஒவ்வொருவரும் கேட்டுக்கொள்ளவேண்டும் என்று நான் விரும்புகின்றேன். மனிதர்கள் தங்கள் நாடுகளுக்காக உயிர் துறந்திருக்கின்றனர். மனிதர்கள் தங்கள் குடும்பங்களுக்காக உயிர் துறந்திருக்கின்றனர். மனிதர்கள் தாங்கள் நம்பிய சில காரணங்களுக்காக உயிர் துறந்திருக்கின்றனர். ஸ்தேவான் போன்ற மனிதர்கள் இயேசுவில் தாங்கள் கொண்டிருந்த விசுவாசத்திற்காக உயிர் துறந்தனர், தேவனுக்கு நன்றி - இன்றும் இதுபோல் நடக்கின்றது. நீங்கள் உங்கள் விசுவாசத்திற்காக மரிக்க விரும்புவீர்களா?

இவ்வினாவைப்பற்றி நீங்கள் ஆழ்ந்து சிந்திக்கையில், இதைக் கவனியுங்கள்: உங்கள் விசுவாசத்திற்காக நீங்கள் வாழத் துணியாத வரையிலும், அதற்காக நீங்கள் மரிக்கத் துணிய மாட்டீர்கள். கிறிஸ்துவைப் போன்ற நடவடிக்கைகள், ஸ்தேவானுக்குள் அவர் கல்லெறியப்படுகையில் திடீரென்று உண்டாகி வளர்ந்து விடவில்லை. அந்தக் கணத்திற்கு நீண்ட நாள் முன்பாகவே அவர் தமது வாழ்வைக் கர்த்தருக்கு ஒப்புக்

கொடுத்து, ''ஆவியினாலும் ஞானத்தினாலும் நிறைந்து'', ''விசுவாசத்தினால் நிறைந்து'' மற்றும் ''கிருபையினாலும் வல்லமையினாலும் நிறைந்து'' பேச முடிந்திருந்தது. வெற்றி மிக்க அவரது மரணமானது வெற்றிமிக்க அவரது வாழ்க்கையைப் பிரதிபலித்தது.

நீங்கள் உங்கள் வாழ்வை இயேசுவுக்கு ஒப்புக் கொடுத்துள்ளீர்களா? இப்பொழுதே நீங்கள் மரிக்க நேர்ந்தால் - இயேசு தம் கரம் விரித்து உங்களை ஏற்றுக் கொள்வார் என்று அறிந்த நிலையில் - "கர்த்தராகிய இயேசுவே என் ஆவியை ஏற்றுக் கொள்ளும்" என்று உங்களால் ஜெபிக்க முடியுமா? ஸ்தேவானுக்குக் காத்திருந்தது போலவே உங்களுக்காகவும் ஒரு ஜீவகிரீடம் காத்திருக்கிறது (2 தீமோ. 4:8; கிரேக்கம்: stephanos) - அது நீங்கள் கர்த்தருக்கு உங்கள் வாழ்வைச் சமர்ப்பித்தால் மட்டுமே கிடைக்கும். இஸ்ரவேலர்கள் தேவனுடைய செய்தியாளர்களை மறுத்த தவறைச் செய்தனர். கிறிஸ்துவை மறுக்கும் தவறை நீங்கள் செய்யாதீர்கள்!

## காட்சி-உதவி க்குறிப்புகள்

எனது நண்பர்களில் ஒருவரான லாய் ஸ்மித் அவர்கள் ஸ்தேவான் பற்றிய பாடத்தை, ஸ்தேவான் கல்லெறியப் படுதலின் காட்சியை முன்வைத்துத் தொடங்கினார். ஸ்தேவானின் படத்திற்குமேல், ''ஸ்தேவான் கல்லெறிந்து கொல்லப் பட்டார்'' என்ற வார்த்தைகள் இருந்தன. பிரசங்கத்தின் முடிவில், அக்காட்சிப் படத்தின் கீழே, ''சமீபத்தில் நாம் யாரையேனும் கல்லெறிந்திருக்கிறோமா?" என்ற கேள்வியைச் சேர்த்தார். பின்பு "புறங்கூறுதல்", "பழி தூற்றுதல்", "கோபமான வார்த்தைகள்", "வீணான விமர்சனம்", "மறைமுகப் பேச்சுகள்" முதலிய பெயர்கள் இடப்பட்ட கற்களைக்கூடக் காண்பித்தார்.

## பிரசங்கக் குறிப்புகள்

இப்பாடத்திற்கான பணி செய்து கொண்டிருக்கையில் தகுதியான பல தலைப்புக்களும், பிரதான உட்தலைப்புக்களும்

எனது சிந்தனையில் வந்தன. இந்தப் பாடம் ‘‘தேவனால் வெற்றியின் கிரீடம் சூட்டப்பட்ட மனிதர்’’ என்று அழைக்கப் பட முடியும். மற்றும் பின்வருமாறு இதன் பிரதான உட்பிரிவு களை ஏற்படுத்தவும் முடியும்: (1) அந்த மனிதரும் அவரது ஊழியமும் (6:8-12); (2) அந்த மனிதரும் அவரது செய்தியும் (6:13-7:53); (3) அந்த மனிதரும் அவரது மரணமும் (7:54-60). இப்பாடமானது “தேவன் நமக்கு ஜெயம் கொடுக்கிறார்!’’ (1 கொரி. 15:57) என்றும் தலைப்பிடப்பட முடியும். இதன் கீழ்வரும் உட்பிரிவுகள் பின்வருமாறு: (1) சொற் போரின் மூலம் வெற்றி; (2) தற்காப்பு வாதத்தின் மூலம் வெற்றி; (3) மரணத்தின் மூலம் வெற்றி.

---

குறிப்புகள்

[1]ஸ்தேவான் செய்த அற்புதங்களும் அடையாளங்களும் என்னவென்று நமக்குக் கூறப்படவில்லை. அவைகள், அப்போஸ்தலர்களால் செய்யப்பட்டவை போன்றே இருந்திருக்கும் என்று நாம் யூகிக்கிறோம். ஆவியானவரின் ஏவுதலுடன் பேசக்கூடிய வரமும் அவருக்குத் தரப்பட்டிருக்கும் (6:10க்கான குறிப்புகளைக் காணவும்). [2]“கிருபையினால் நிறைந்து’’ என்பது ஸ்தேவான் கிருபையுள்ள நபராக இருந்தார் என்று பொருள்படக் கூடும், அவர் மக்களின் தயவுடன் (கிருபையுடன்) நின்றார் அல்லது தேவனுடைய கிருபை விசேஷித்த விதத்தில் அவர் மேல் தங்கிற்று என்று கூறலாம். அவர் ஒரு கிருபை பொருந்தினவராயிருந்தார் (7:2); ஆரம்பத்தில் அவர் மக்களின் தயவுடன் நின்றிருக்கலாம்; ஆனால் தொடர்ந்து நடந்த சம்பவங்களின் வெளிச்சத்தில், NIV வேதாகமம் வசனத்தின் இந்தப் பகுதியை “கிருபையினாலும் வல்லமையினாலும் நிறைந்த ஒரு மனிதராய்’’ என்று மொழிபெயர்த்துள்ளது சரியானதே. [3]நம்மில் ஒவ்வொருவரும் தமக்கென்று ஒரு விசேஷித்த ஊழியத்தைக் கண்டடைய வேண்டியது அவசியமாகும் - அந்த விசேஷித்த பணியானது கர்த்தருடைய சபையில் தேவனால் நமக்குத் தகுதியானதாக்கப்பட்டிருக்க வேண்டும். நாம் ஒவ்வொருவரும் இதைச் செய்தோமென்றால், இது கர்த்தருடைய ஊழியத்தில் பெருத்த ஒரு மாறுதலை ஏற்படுத்தும்! ஆயினும், இதை நாம் செய்தால், இராஜ்யத்தில் வேறு எப்பணியையும் செய்யாமலிருக்க இதை ஒரு சாக்குப் போக்காகப் பயன்படுத்தக் கூடாது. நமக்கு ‘‘விசேஷ வரங்கள்’’ இல்லையென்றாலும் கொடுக்கப்பட்டுள்ள பொதுவான கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய நாம் நம்மையே ஒப்புக்கொடுக்க வேண்டும். உதாரணமாக, 8:1-4ல் ஒவ்வொரு கிறிஸ்தவரும் வசனத்தைப் பிரசங்கிக்க ஆரம்பித்ததை நாம் கவனிக்கப் போகிறோம். அவர்கள் அனைவரும் சுவிசேஷ ஊழியத்திற்கான விசேஷித்த வரங்கள் பெற்றவர் களல்ல என்பது எனக்கு உறுதியாகத் தெரியும். [4]வீடுகளில் தனிப்பட்ட முறையில் உபதேசங்கள் நடைபெற்றன (2:46). [5]பழங்கால எழுத்தாளர் ஒருவர், எருசலேமில் 480 ஜெப ஆலயங்கள் இருந்ததாகக் கூறியுள்ளார். அப். 6:9ல் மாறுபட்ட கலாச்சாரப் பின்னணிகளைக் கொண்டவர்களுக்கு இடமளிப்பதற்காக அநேக ஜெப ஆலயங்கள் ஆரம்பிக்கப் பட்டன என்பது சுட்டிக்காட்டப்படுகின்றது, இந்த ஜெப ஆலயங்களில் அவர்கள் சகஜமான நிலையில் இருக்க முடியும். கல்வியாளர்கள்,

*வசனம் 9ல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு குழுவுக்கும் ஒன்று வீதம், ஐந்து ஜெப ஆலயங்களைக் கண்டறிகின்றனர். கிரேக்கரானவர்(யூதர்)களின் ஒன்றுக்கு மேற்பட்ட ஜெப ஆலயங்களுக்கு, இயேசுவின் வரலாற்றைக் கூற ஸ்தேவான் சென்றிருக்கச் சாத்தியமுண்டு. ஆயினும், மூல பாஷை வசனமும், ஆங்கில மொழிபெயர்ப்பும், (தமிழ் மொழிபெயர்ப்பும் கூட) "ஜெப ஆலயம்" என்று ஒருமைச் சொல்லைப் பயன்படுத்துவதால் இப்பாடத்திலும் இது ஒன்றைக் குறிப்பதாகவே உள்ளது. [6]சிரேனேயிலிருந்த மனிதர்கள் அந்தியோகியாவுக்கு சுவிசேஷத்தை எடுத்துச் சென்றனர் (11:20). அப்பொல்லோ என்பவர் அலெக்சந்திரியா பட்டணத்தைச் சேர்ந்தவர் ஆவார் (18:24). ஆசியாவைச் சேர்ந்த யூதர்களே, பின்னாளில் பவுல் கைதானதற்குப் பொறுப்பாளிகளாயிருந்தனர் (21:27; 24:18, 19). (இவர்களில் யாரேனும் ஸ்தேவானால் எரிச்சலடைந்தவர்களாயிருக்கக் கூடுமா?) [7]மோசேக்கும், தேவனுக்கும், தேவாலயத்திற்கும், பிரமாணத்திற்கும் விரோதமாகப் பேசினார் என்பதே ஸ்தேவானுக்கு எதிராக எழுப்பப்பட்ட குற்றச்சாட்டாகும் (6:11, 13, 14). இந்தக் குற்றச்சாட்டுகள் யாவும் பொய்களே, ஆனாலும் இப்பொய்கள் செயல்படுபவைகளாயிருக்க சத்தியத்தின் கூறு ஒன்று அவர்களுக்குத் தேவையாயிருந்தது. இந்தப் பொய்கள் - மற்றும் அதிகாரம் 7ல் ஸ்தேவானின் தற்காப்பு வாதம் ஆகியவையும் இணைந்து - ஸ்தேவான் அப்போது அவ்வளவாகப் பரவியிராதவற்றைப் பிரசங்கம் செய்தார் என்று நமக்கு அடையாளப்படுத்துகின்றது. [8]"அவனை இழுத்துக் கொண்டு போய்" என்பது அவர்கள் ஸ்தேவானை உதைத்துச் சண்டையிட்டு இழுத்துக் கொண்டு ஆலோசனைச் சங்கத்தாரிடம் சென்றனர் என்று பொருள்படாது (5:26க்கான விளக்கவுரைகளை நடபடிகள் 1 இதழில் காணவும்). "இழுத்துக் கொண்டு" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது எதிர்பாராத வகையில் அந்நிகழ்ச்சி நடந்தது என்பதை மட்டுமே குறிப்பிடுகின்றது. NIVயில், "அவர்கள் ஸ்தேவானைக் கைப்பற்றினர்" என்ற கருத்து உணர்த்தப்படுகிறது. [9]மோசே தம் வாய்மொழியாகக் கொடுத்ததும், பின் வந்த தலைமுறைகள் தோறும் ஒப்புவிக்கப்பட்டதுமான எழுதப்படாத சட்ட விதிகள் தங்களுக்கிருந்தது என்று யூதர்கள் எண்ணினர். இவ்விதமாக, நியாயப்பிரமாணத்தைப்போலவே அந்தப் பாரம்பரியங்கள்/பழக்கங்கள் ஆகியவையும் தங்களைக் கட்டுப்படுத்துவதாக அவர்கள் கருத்துக் கொண்டிருந்தனர். எழுதப்பட்டிராத இவ்வித சட்டங்கள் தேவனிடத்திலிருந்து வந்ததென்று இயேசு மதிக்கவில்லை என்பது தெளிவு. நியாயப்பிரமாணம் தேவனுடைய கட்டளைகளைக் கொண்டிருந்ததாகவும், ஏவப்பட்டிராத இந்தப் பாரம்பரியங்கள்/பழக்கங்கள் ஆகியவை மனிதருடைய கட்டளைகளாயிருந்ததாகவும் அவர் போதித்தார். [10]கி.பி. 70ல் ரோமாபுரியாரால் எருசலேம் அழிக்கப்படுவதை இயேசு குறிப்பிட்டிருந்தார். இயேசு தமது சரீரத்தை "இந்த ஆலயம்" என்று குறிப்பிட்டிருந்த இன்னொரு போதனையும் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டிருந்தது (யோவா. 2:18-22; மாற். 14:58; 15:29).*

*[11]காய்பா அல்லது அன்னா இவ்விடத்தில் பிரதான ஆசாரியராயிருந்திருக்க வேண்டும். அப்போதைய பிரதான ஆசாரியரே சனகெரீன் சங்கத் தலைமைப் பொறுப்பேற்றிருந்தபடியால், இது காய்பாவாக இருந்திருக்க வேண்டும் என்று நான் யூகிக்கிறேன். [12]தேவன் சில சமயங்களில் பவுலுக்கு இவ்விதமான தரிசனங்களைக் கொடுத்தார் (18:9, 10; 23:11; 27:23, 24ஐக் கவனிக்கவும்). பின்னாளில், விசுவாசத்திற்காகத் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணிக்கத் துணிந்தவர்களை ஊக்கப்படுத்துவதற்கென்றே லூக்கா இத்தரிசனத்தைப் பற்றிக் கூறினார் என்பதில் சந்தேகமில்லை. [13]ஒருவருக்கு மரியாதை செலுத்த வேண்டுமென்றால் நாம் எழுந்து நிற்கிறோம். இயேசு அமர்ந்திருப்பதற்குப் பதிலாக எழுந்து நின்றிருந்ததாகச் சித்தரிக்கப்பட்டதற்கு வேறு சில கருத்துக்களும் தரப்படுகின்றன: அவர் விரித்த*

*கரங்களுடன் ஸ்தேவானை வரவேற்கத் தயாராக நின்றார்; அவர் தேவனிடத்தில் ஸ்தேவானுக்காகப் பரிந்து பேசி அறிக்கையிடத் தயாராக நின்றார்; ஸ்தேவானைக் கொலை செய்தவர்களை நியாயந்தீர்க்கத் தயாராக அவர் நின்றார் முதலியன. காரணம் எதுவாயிருப்பினும், இயேசு நின்றிருந்ததாகச் சித்தரிக்கப்பட்டதற்கு விசேஷத் தனிச்சிறப்பு உள்ளது என்று பல விரிவுரையாளர்கள் எண்ணுகின்றனர். [14]இயேசுவும், ஸ்தேவானும் சத்தியத்தையே பேசினர், எனவே அவர்கள் தேவதூஷணக் குற்றமுடையவர்களாய் இருக்கவில்லை. [15]வேதவசனங்களில், இயேசுவிடம் ஜெபம் செய்வது என்று குறிப்பிடப்பட்டுள்ள சிலவற்றில் இதுவும் ஒன்றாகும். இயேசுவை நோக்கி ஜெபிப்பது தவறல்ல என்று இது சுட்டிக் காட்டுகிறது (இயேசுவை நேரடியாகப் பாடுகின்ற அநேக பாடல்களை நாம் பயன்படுத்துகின்றோம்). ஆனால் இயேசுவினிடத்தில் நேரடியாக ஜெபிப்பதற்கு ஒரு சில முன்னுதாரணங்களே இருக்கின்றன, எனவே இந்த ஜெபங்கள் விதிகளல்ல மாறாக விதி விலக்குகளேயாகும். இயேசுவின் மூலமாக தேவனிடத்தில் ஜெபிக்க வேண்டும் என்பதே சட்டமாகும் (1 தீமோ. 2:5; யோவா. 16:23, 24).*